**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், செய்யூர்**
**அசல் வழக்கு எண்.87/2022**
**(PW1)**

| | | |
|---|---|---|
| **பெயர்.திருமதி.பாக்கியலட்சுமி** | த/பெ.(அ)க/பெ.ஞானசுந்தரம் | நாள் 01.02.2024 |

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

இந்த வழக்கை கற்பகம்மாளுக்கு எதிரான தாக்கல் செய்துள்ளேன். அவர் எனக்கு விற்ற சொத்தை மீண்டும் கேட்டு பிரச்சனை செய்வதால் எனது சொத்தை நானே வைத்துக்கொள்வதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எந்த எந்த சர்வே எண்களை கிரையம்பெற்றேன் என்றால் சர்வேஎண்.15/1ஏ, 15/1பி, 15/2 மொத்தம் 1 ஏக்கர் 31 செண்ட்டை கற்பகம்மாளின் சொத்துக்களை கிரையம் பெற்றேன். அத்துடன் கற்பகம்மாளின் தாயாரின் சர்வே எண்.15/3 - 13 செண்ட் ஆகியவற்றையும்மேற்சொன்ன சர்வே எண்களை கிரையம்பெறும்போதே செய்யூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் பெற்றேன்.

2. எனக்கு 1984ம் வருடம் திருமணமானது. எனது கணவரின் முதல் மனைவி இறந்துவிட்டார் என்றால் சரிதான். பிரதிவாதி கற்பகமும் எனது கணவரும் உடன் பிறந்த சகோதர, சகோதரி என்றால் சரிதான். நான் தற்போது குடும்ப தலைவியாக இருந்து வருகிறேன். திருமணத்திற்கு முன்பு நான் வீட்டில் இருந்தேன். அப்போது நான் வேலைக்கு செல்லவில்லை.

3. திருமணத்திற்கு பிறகு டிராவல்ஸ் வைத்து தொழில் செய்து வந்தேன். தாவா சொத்து எனது கணவர் தான் வாங்கிகொடுத்தார் என்றால் எனது பணத்தில் எனது கணவர் வாங்கி கொடுத்தார். தாவா சொத்து கற்பகத்திற்கு எப்படி கிடைத்தது என்று முன் ஆவணங்களை பரிசோதனை செய்த பின்பு கிரையம் வாங்கினேனா என்றால் பரிசீலனை செய்த பிறகு தான் கிரையம் பெற்றேன்.

4. கற்பகத்திற்கு அந்த சொத்து எவ்வாறு கிடைத்து என்பதற்கு எந்த எந்த ஆவணங்களை பரிசீலனை செய்து கிரையம் பெற்றேன் என்றால் தெரியாது. தற்போது நினைவில்லை. நான் 1வது வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது.

5. என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும், பிராதிலும் சொல்லியுள்ள விவரங்களை பற்றி எனக்கு தெரியாது என்றால் இந்தவிவரங்கள் தற்போது நினைவில் இல்லை. மேற்சொன்ன ஆவணங்களில் என்ன என்ன விவரங்கள் உள்ளது என்று தெரியாது என்றாலும் வழக்கிற்காக நினைவிலலை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. பிரமாண வாக்குமூலத்தில் 2வது பத்தியில் தாவா சொத்தில் கிரையப் பத்திரத்தை 2வது வாதிக்கு கார்டியனாக நான் கிரையம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் மகன் ஓம்குமாருக்கு 37 வயதாகிறது. அவர் தற்போது நல்ல மனநிலையுடன் உள்ளார் என்றால் சரிதான். எனது மகனுக்கு 18 வயது ஆகிவிட்ட நிலையில் தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லாத போது நானும் சேர்ந்து ஏன் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்தில் நான் தான் பயிர் செய்து வருகிறேன். எனது மகன் வெளிநாட்டில் வசித்து வருகிறார்.

7. எனது மகன் அவர் சார்பாக வழக்கை நடத்துவதற்காக பொது அதிகாரம் எதாவது கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. நான் கிரையம் வாங்கிய ஆவணத்தை தாக்கல்செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தின் எண் என்ன என்றால் தற்போது நினைவில்லை. அதனுடைய அசல் பத்திரம் என்னிடம் தான் உள்ளதா என்றால் உள்ளது. ஆனால் நீதிமன்றத்தில் சான்றிட்ட நகல் மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

8. அசல் பத்திரம் என்னிடம் உள்ளபோது சான்றிட்ட நகலை ஏன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசல் பத்திரம் என்னிடம் இல்லை என்றாலும் அதனால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் தகராறு செய்ததால் மனுவில் குறிப்பிட்டுள்ள நிலையில் அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் எதாவது புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்று வழக்கை தாக்கல் செய்தேன்.

9. உண்மையிலேயே பிரதிவாதி தகராறு செய்திருந்தால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் அவ்வாறு எந்த தகராறும் ஏற்படாததால் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் எனக்கு காவல் நிலையத்திற்கு செல்ல பிடிக்காததால் நீதிமன்றத்தை அணுகினேன்.

சாட்சிக்கு எழுத படிக்க தெரியாது என்பதால் அவருக்கு படித்து காண்பிக்கப்பட்டு பின்னர் கையொப்பம் மட்டும் பெறப்பட்டது.

வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-N.Preethi
DM Cum JM
Cheyyur